செ.வெ.எண். 47/ஜூலை தேதி : 26.07.2016

<u>பத்திரிக்கை செய்தி</u>

# காால்நடை பாதுகாப்புத் திட்ட முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.





தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ராமாபுரம் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடை பாதுகாப்புத்திட்ட முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.07.2016) நடைபெற்றது.

இம்முகாமில் சிறந்த முறையில் பராமரிக்கப்படும் பசுகன்றுகளுக்கு பரிசுகளை வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

இன்றையதினம் நடைபெற்ற முகாமில் 1088 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற்று வருகிறது. கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தருமபுரி மாவட்டத்தில் 2016-17ம் ஆண்டில் 112 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்கள் நடத்தப்படவுள்ளது. கால்நடை மருந்தகங்களிலிருந்து தொலைதூர கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவ சேவை அதன் இருப்பிடத்திலே கிடைக்கும் வண்ணம் இம்முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

இம் முகாமில் நோய் சிகிச்சை, குடற்புழு நீக்கம், ஆண்மைநீக்கம், சுண்டுவாத அறுவை சிகிச்சை, கோழிகழிச்சல் தடுப்பூசி, கால்நடை பண்ணைகள் துவங்க ஆலோசனை, சினை பரிசோதனை, செயற்கைமுறை கருவூட்டல் ஆகியவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு முகாமிற்கும் ரூ.3000/- மதிப்பிலான மருந்துகள் மற்றும் ரூ.300/-மதிப்பில் செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் பரிசு பொருட்கள் மற்றும் விளம்பரத்திற்காக ரூ.900/- மொத்தம் ரூ.5,200/- செலவிடப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.தொ.மு.நாகராஜன், தருமபுரி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.தமிழ்செல்விகுமார், மாவட்ட ஊராட்சி மற்றும் ஒன்றியகுழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத்தலைவர், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு. ஸ்ரீனிவாசன், துணை இயக்குநர் மரு. மகேஸ்வரன், உதவி இயக்குநர்கள் மரு. இளங்கோவன், மரு. பாபு மற்றும் உதவி இயக்குநர் கால்நடை உதவி மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.